கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் எஸ்.கே.நவாப், கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.பரிதா நவாப் ஆகியோரால் நிறுவப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கல சிலை திறப்பு விழா கிருஷ்ணகிரி கலைஞர் மேம்பாலம் அருகே நடைபெற்றது. விழாவில் கழக பொதுச் செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமை தாங்கினார். கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செய்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.காந்தி, எஸ்.எஸ்.சிவசங்கர், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, தே.மதியழகன். ஒய்.பிரகாஷ் டி.செங்குட்டுவன், இ.ஜி.சுகவனம், எம்.வி.வெற்றிச்செல்வன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரியில் - நகரச் செயலாளர் எஸ்.கே.நவாப் - நகர்மன்றத் தலைவர் பரிதா நவாப்பால் நிறுவப்பட்ட

முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் தலைமையில் விழா!

கிருஷ்ணகிரி, நவ. 26- கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருஉருவ வெண்கல சிலையினை கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் கிருஷ்ணகிரி நகர கழகச் செயலாளர் எஸ்.கே.நவாப் கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.பரிதா நவாப், ஆகியோரால் நிறுவப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கல சிலை திறப்பு விழா கிருஷ்ணகிரி கலைஞர் மேம்பாலம் அருகே நடைபெற்றது. விழாவிற்கு கழக பொதுச் செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமை தாங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருட்கள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி வரவேற்புரை ஆற்றினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லம்ரஹ்மான் ஷெரீப் , பாலன் நாகராசன், கே.ஆர்.கோதண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செய்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி மற்றும் நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை கே.ஆர்.பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்துப் பாதுகாப்பு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் எம்.வி. வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.கோவிந்தசாமி, கிருஷ்ண மூர்த்தி, நரசிம்மன், மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன், அரியப்பன், மாநில மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, பி.டி. அன்பரசன், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், மகேந்திரன் தேங்காய் சுப்பிரமணி, சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், குண.வசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம் குமரேசன், பேரூர் கழகச் செயலாளர்கள் பாபு, தம்பிதுரை, வெங்கடப்பன் பாபு சிவகுமார், அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன், ஜெயேந்திரன், லட்சுமி பிரியா, புஷ்பா விஜய் ராஜசேகர், காந்தி, பாலாஜி, சுரேஷ்குமார், ஜெயக்குமார், சாஜித், இளையராஜா, மோகன், வேல்மணி அம்மன் ராஜா, சங்கர், தமிழ்ச்செல்வன், ஜீவானந்தம், வெங்கடேஷ் ராஜா, மாணிக்கம், சத்தி நாராயணமூர்த்தி, நேதாஜி, கிருஷ்ணன் மற்றும் அணிகளின் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், வட்ட பிரதிநிதிகள், ஊராட்சி செயலாளர்கள், வார்டு செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். முன்னதாக குத்தூஸ் அவர்களின் இன்னிசைநிகழ்ச்சி நடைபெற்றது.

முடிவில் கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் எஸ். கே.நவாப் நன்றி உரையாற்றினார்.

வேலூர் நகர அரங்கில் நேற்று (25.11.2023) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "பகுத்தறிவு சீர்திருத்த செம்மல் கலைஞர்" சிறப்பு புகைப்படக் கண்காட்சியை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர். அர.சக்கரபாணி, நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, கூடுதல் செயலாளர் திருமதி.மலர்விழி, மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் து.மு.கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார். ப.கார்த்திகேயன், திருமதி.அமுலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளினை முன்னிட்டு

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி!

மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், நவ. 26- நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாமக்கல் கிழக்கு மாவட்டம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு நாளை (27.11.2023 - திங்கள்) ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தலைமையில், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் கள் முன்னிலையில் ஆதரவற்ற முதியோர் இல்லங்களில் உணவு வழங்குதல் நிகழ்ச்சி, அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு - புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி, அனைத்து ஊராட்சி, வார்டு, கிளைக் கழங்களில் உள்ள கொடி கம்பங்களில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கிட வேண்டும்.

இந்நிகழ்வில் வனத் துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கே. பொன்னுசாமி, நாமக்கல் கிழக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தொண்டர்கள் என அனைவரும் அவர் அவர்களுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் களில் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர் ஏற்பாடு செய்ய வேண்டுமென நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.